
# லோத்தின் நாட்களில் நடந்தது போல





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இப்பொழுது, அவன் ஒருநாள் அங்கே வெளியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்கிறோம். நாம் இதை ஒரு சிறு நாடகமாகக் கொடுப்போம், அப்போது இங்கேயிருக்கும் இந்தச் சிறு பிள்ளைகள் அதை தெளிவாகக் கேட்க முடியும். இப்பொழுது, ஆபிரகாம் ஒரு காலையில் கூடார வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அங்கே அவனுடைய இடத்திற்கு முன்பு, ஒரு பெரிய சிந்தூர மரம் (oak tree) இருந்தது. அந்த கருவாலி மரம் (oak) இன்னும் அங்கே நிற்பதாக அவர்கள் உரிமை கோருகிறார்கள். அவர்கள் அதை பாதுகாக்கப்பட்ட இடமாக (preserved) வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். நல்லது, அங்கே தான் அவன் தன்னுடைய கூடாரத்தை அடித்திருந்தான், அங்கே வெளியே வனாந்தரத்தில்... லோத்துவோ அங்கே கீழே இருந்தான், என்னே, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை உடையவர்களாக இருந்தார்கள் என்று ஊகிக்கிறேன், அவன் புகைப்பிடிப்பதற்கான ஒரு பெரிய சுருட்டை (cigar) வைத்திருந்தான், மேலும் அவன் அந்தப் பட்டணத்தின் பெரு நகராண்மைக் கழகத் தலைவராக (mayor)

இருந்தான், உங்களுக்குத் தெரியும். திருமதி. லோத்தும் அவளுடைய குமாரத்திகளும் மற்றும் அவர்கள் எல்லாருமே புதுப்பாணி நாகரிக நடை, உடை பாவனைகள் கண்காட்சிகள் (fashion shows) நடக்கும் பல இடங்களுக்குப் போய்க்கொண்டும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும், அந்நாட்களின் பாணிகளுக்குப் (styles) பின்னால் ஒப்பனை செய்து (அழகுபடுத்திக்) கொண்டும், இருந்தார்கள். **ஆனால் சாராளோ உண்மையாக நின்றாள்; ஆபிரகாமும் உண்மையாக நின்றான்; அவர்கள் தேவனோடு தரித்திருந்து, அங்கே வெளியில் தங்கியிருந்தார்கள்.**

35. இப்பொழுது, என்ன சம்பவித்தது? ஒருநாள் ஆபிரகாம் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஏறக்குறைய பகல் பதினொரு மணியளவில், நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவன் அங்கே அதனூடாக ஏறி வந்து கொண்டிருப்பவர்களை நோக்கிப் பார்க்கிறான், இதோ மூன்று மனிதர்கள், தங்கள் வஸ்திரங்கள் முழுவதும் தூசி படிந்தவர்களாக, நெடுக நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதைக் குறித்து ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும், **நீங்கள் முழுவதுமாக ஜெபித்து முடித்துவிடாமல் இருப்பீர்களானால் *(prayed up)*, தேவனுடைய ஆசீர்வாதமானது சரியாக உங்கள் பக்கத்திலேயே கடந்து போக முடிந்தாலும், அதை அறியாமலே இருப்பீர்கள்.** நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், **முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

சமீபத்தில் ஐயர்லாந்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் பெண்மணி அங்கே இருந்தாள், அவள் ஒரு கப்பலில் இருந்ததாக அவர்கள் கூறினார்கள் மேலும் அவள்... ஏறக்குறைய அந்நேரத்தில், ஓ, அவர்கள் ஏறக்குறைய நியூயார்க்குக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு பெரிய கடும் புயலானது அந்த சமுத்திரத்தின் குறுக்கே வீசியடித்தது, கப்பலானது இக்கட்டில் இருக்கிறது என்ற சமிக்சையையும் (SOS's) வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார்கள், அதுவோ தண்ணீரில் தலைகீழாகப் பாய்ந்து இடத்திற்கிடம் மூழ்கிக் கொண்டேயிருந்தது. அப்போது இசைக்

கருவிகளை இசைக்கும் கூட்டம் இசைத்துக் கொண்டிருந்தது; அவர்களால் முடிந்த எல்லா ராக்-அன்-ரோல்களையும், மற்றும் அதைப் போன்ற எல்லாவற்றையும் அவர்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடங்கினார்கள் - இசைக்குழு இசைக்கத் தொடங்கினது... அப்போது கப்பல் தலைவன் (Captain), "எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்; நீங்கள் உங்கள் சபையில் ஜெபிக்கிற விதமாக எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்" என்றான். உடனே பாண்டு இசைக் கருவிகள் "உம்மண்டை, என் தேவனே" என்று இசைக்கத் தொடங்கினது. அவர்கள் எல்லாரும் அவ்வாறு செய்யத் தொடங்கிளார்கள்.

36. ஒரு சிறு ஐரிஸ் பெண்மணியோ தரையில் மேலும் கீழும் நடக்கத் தொடங்கினாள். அந்த கேப்டன், "நம்மால் மாத்திரம் இந்தப் புயலுக்கு முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடுமானால், நாம் துறைமுகத்திற்குள் வந்து, நங்கூரத்தை போடுவோம். ஆனால் நம்மால் முப்பது நிமிடங்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்" என்றான்.

அந்தச் சிறு ஐரிஸ் பெண்மணியோ, "தேவனுக்கு மகிமை. அல்லேலூயா" என்றாள்.

எனவே கப்பல் தலைவன் (Captain) மேலே நடந்து வந்து, “சீமாட்டியே, நான் என்ன சொன்னேன் என்று புரிந்ததா?” என்று கேட்டான். அவன்...

அவள், “நீர் சொன்னது எனக்குத் தெளிவாகப் புரிந்தது, ஐயா” என்று சொன்னாள்.

அவன், “நம்மால் இந்தப் புயலில் முப்பது நிமிடங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில் நாம் கடலின் கீழே இருக்கலாம் என்று தான் சொன்னேன்” என்றான்.

அதற்கு, “நீர் என்ன அர்த்தத்தில் (சொன்னீர்) என்பது எனக்குப் புரிந்தது. அல்லேலூயா. தேவனுக்கு துதி உண்டாவதாக” என்றாள்.

“நீங்கள் ஏன் ஜெபிக்கவில்லை?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “நான் முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up). இனியும் ஜெபிக்க வேண்டியதில்லை. நான் துவக்க முதலே முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up)” என்று கூறினாள்.

நல்லது, “நீங்கள் கடலின் அடியில் இருக்கலாம் என்று அறிந்திருந்தும், நீங்கள் ஏன் அவ்விதமாக அல்லேலூயா என்று கூற முடிந்தது?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “ஐயா, நான் நியூயார்க்கில் வசிக்கும் என்னுடைய ஒரு மகளைக் காண, ஐயர்லாந்திலிருந்து வரும் என்னுடைய பாதையில் இருக்கிறேன். எனக்கு ஒரு மகள் மகிமையில் இருக்கிறாள், ஒருவள் நியூயார்க்கில் இருக்கிறாள். நான் கீழே போவேன் என்றால், அங்கே மேலேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன். நாம் கரையைப் பிடித்து (land) விட்டோம் என்றால், அங்கேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன்” என்றாள். அது சரியே. முற்றிலுமாக ஜெபித்து முடித்து விடுதல் (Prayed up)... ஆமென். தரித்திருப்பதற்கான வழி அதுதான், முழுவதும் ஜெபிப்பது. அதற்காக ஆத்தமாகுங்கள். அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருத்தியை சந்திக்கப் போகிறாள். அது... என்று அவள் அறிந்திருந்தாள். அங்கே மேலேயோ அல்லது இங்கே கீழேயோ, அது எந்த வித்தியாசத்தையும் அவளுக்கு ஏற்படுத்தவில்லை, அது செய்தது - அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருவளைக் காணப் போகிறாள். இப்பொழுது, அது

நல்லது, அது அருமையானது. **சபையானது எல்லா நேரமும் அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும், முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

37. **ஆபிரகாம் முழுவதுமாக ஜெபித்து முடித்து விட்டு, அங்கு வெளியே உட்கார்ந்திருந்தான்**. ஒருக்கால் லோத்து அங்கே கீழே இருந்து, அங்கே அந்த வனாந்தரத்திலே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறியாதிருந்தான். ஆனால் ஆபிரகாம் நோக்கிப் பார்த்தபோது, அது சற்று வினோதமாக காணப்படுவதை அவன் அடையாளம் கண்டுகொள்ளும் வண்ணமாக, அங்கே வெளியே அதன் முன்பாக நடந்து வந்து கொண்டிருந்த அந்த மனிதரைக் குறித்து ஏதோவொன்றிருந்தது. ஓ, என்னே. வினோதமாக தோற்றமளிக்கும் மனிதர்... அவன் ஓடிச்சென்றான், நீங்கள் கவனிப்பீர்களானால், முதல் முதல் காரியத்திலேயே அவன், "என்..." என்றான். அவன், "என் ஆண்டவன்மார்களே" என்று கூறவில்லை. ஷிரிவ்போர்ட்டில், அன்றொரு இரவு அந்த கருத்துக்குறிப்பைக் கூறின அந்த யூத


சகோதரனோடு நான் நிச்சயமாகவே முரண்படுகிறேன். “என் ஆண்டவன்மார்களே” என்று அவன் கூறவில்லை, ஆனால், “என் ஆண்டவரே (My Lord)” என்று தான் கூறினான், ஆ-ண்-ட-வ-ரே, ஒருவர். “என் (பெரிய எழுத்து) ஆ-ண்-ட-வ-ரே, நீர் உள்ளே வர மாட்டீரா.” இப்பொழுது, உங்களில் யாராவது அங்கு மொழிபெயர்ப்பாளரைக் கவனித்துப் பாருங்கள், அது ஏலோகிம் என்பதாக இருந்தது, ஆபிரகாம் அவரை அழைத்தான்... அவரை உள்ளே அழைத்து வந்தான். “நீர் உள்ளே வந்து உட்கார மாட்டீரா. நான் போய் உமக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து, உம்முடைய கால்களைக் கழுவுகிறேன். துணிக்கை அப்பமும் (morsel of bread) எடுத்துக்கொள்ளும். அதன்பிறகு நீர்... உமது-உமது வாஞ்சையைத் தீர்த்துக்கொள்ளும், பிறகு நீர் எங்குபோக வேண்டுமானாலும் அங்கே போகலாம்” என்று கூறிவிட்டு, அவன் அதனூடாக நழுவிச் சென்று, “சாராளே, சாராளே, ஸ்ஸ். யாரோ ஒருவர் அங்கே வெளியில் இருக்கிறார்; மிக சீக்கிரமாக கொஞ்சம் மாவையோ, அல்லது சோள மாவையோ (cornmeal) ஆயத்தம் செய்” என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

# ~ 10 ~


*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*



# எப்போதுமே நியாயத்தீர்ப்பில் மூன்று வகைப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்




**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

40. இப்பொழுது, ஆபிரகாம் இந்த ஆகாரத்தை அங்கு வெளியே எடுத்துக்கொண்டு வந்து, அந்த மனிதர்களுக்கு முன்பாக வைத்தான், அவர்கள் புசித்தார்கள். இப்பொழுது, **அவர்கள் எதற்காக பிரயாணம் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க ஆபிரகாம் ஆவல் கொண்டவனாக இருந்தான், ஏனென்றால் அங்கேயிருந்த அவர்களில் ஒருவர், அந்த மிக முக்கியமான ஒருவர் தேவன் என்று அவன் அறிந்திருந்தான்.** அது தேவன் தான் என்று அவன் அறிந்திருந்தான்; அவன் அவரை ஏலோகிம் என்று அழைத்தான். எனவே இப்பொழுது, அது எதை குறித்துக்காட்டினது?

**அவர்களில் இரண்டு பேர் எழுந்து, சோதோமுக்குள் இறங்கிப் போவதை**

**நாம் கண்டுகொள்கிறோம்.** அவர்கள் அங்கே பிரசங்கம் பண்ணும்படியாக இறங்கிச் சென்றார்கள், வெளியே அழைக்கப்பட (வேண்டியவர்களை) வெளியே அழைக்கும் படியாகப் போனார்கள். **அவன் அங்கே இறங்கிச் சென்று, பிரசங்கம் பண்ணத் தொடங்கின போது, அவர்கள் அநேக அற்புதங்களைச் செய்யாமல் அவர்களை குருடாக அடித்தார்கள் என்பதை நாம் காண்கிறோம். சுவிசேஷத்தைப் பிரசங் கம் பண்ணுதல் குருடாக அடித்துப் போடுகிறது.** ஆனால் அங்கே...

41. **இப்பொழுது, எப்போதுமே நியா யத்தீர்ப்பில் மூன்று வகைப்பட்ட ஜனங் கள் இருக்கிறார்கள் என்பதை நினை வில் கொள்ளுங்கள். மணவாட்டி கிறிஸ்துவோடு கூட திரும்பி வருகிறாள் என்று தானியேலில் நாம் கண்டுகொள் கிறோம்.** ஆதிகாலத்து நாட்களோடு கோடா

கோடி பேர் வந்தார்கள். நியாயசங்கம் உட்கார்ந்தது, புஸ்தகங்கள் திறக்கப்பட்டது, வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அது தான் ஜீவ புஸ்தகம் (Book of Life). பாருங்கள் நித்திரை செய்யும் கன்னிகை நியாயத் தீர்ப்புக்காக மேலே வருகிறாள். தேவபக்தியற்றவர்களுடைய ஒரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அவர் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாட்டை வேறுபிரித்தார், **ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையானது அவரோடு கூட திரும்பி வருகிறது.**

**இயேசு மூன்று தடவைகள் வருகிறார். அவர் முதலாவது தமது மணவாட்டியை மீட்டுக் கொள்ள வந்தார். இரண்டாவது முறை அவர் அவளைக் கொண்டு செல்ல** (catch Her away) **வருகிறார். மூன்றாவது முறை அவளோடு கூட வருகிறார்**: அவருடைய மணவாட்டியை மீட்டுக்கொள்ளவும், அவருடைய மணவாட்டியைப் பெற்றுக்கொள்ளவும்,

அவரையும் அவருடைய மணவாட்டியையும் இராஜாவும் இராணியுமாக, திரும்ப பூமியின் மேல் கொண்டு வந்து, அவருடைய பிதா வாகிய, தாவீதின் சிங்காசனத்தின் மேல் உட்கார வைக்கிறார்.

42. இப்பொழுதும், எல்லா நேரத்திலுமே அங்கே மூன்று வகைப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். நாம் இன்றும் அதைக் கவனிக்கிறோம். அங்கே லூத்தரன்களும், மெதோடிஸ்டுகளும், பெந்தெ கோஸ்தேகாரர்களும் இருந்திருக்கிறார்கள். அங்கே பாவிகளும், தேவபக்தியற்றவர்களும், நித்திரை செய்யும் கன்னிகையும், உண்மை யான கன்னிகையும் இருக்கிறார்கள். எப்போ துமே அவ்வாறு உள்ளது. இப்பொழுது, அங்கே சோதோமியர்கள் இருந்தார்கள் என்றும், அங்கே லோத்து இருந்தான் என்றும், வெதுவெதுப்பான (lukewarm - அரை மனதுடைய, அரைகுறை ஆர்வமுடைய) சபை, இங்கே அவர்களை விட்டு தன்னை வேறுபிரித்து, தனியாக (apart - சேராமல்,

பிரிந்து) வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரகாம் இருந்தான் என்றும் நாம் கண்டுகொள்கிறோம். இப்பொழுது, "சபை" என்ற அந்த தனிப்பட்ட வார்த்தைக்கு "வேறுபிரித்தல் (separation)" என்று அர்த்தம்.

இஸ்ரவேலர்கள் வனாந்தரத்திற்குள் வருவது மட்டுமாக அவர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தார்கள், அவர்கள் வெளியே அழைக்கப்பட்டிருந்த போது, அவர்கள் தேவனுடைய சபையாக இருந்தார்கள். "சபை" என்பதற்கு "வெளியே அழைக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்டு, ஒரு பிரத்தியேகமான நோக்கத்திற்காக ஒதுக்கி வைத்தல்" என்று அர்த்தம். **ஆபிரகாம் தெரிந்துகொள்ளப்பட்ட சபையாக இருந்தான். லோத்து நித்திரை செய்யும் கன்னிகையாக அல்லது சடங்காசார சபையாக** (formal church) **இருந்தான். அதன்பிறகு அங்கே சோதோமிய**

**ராகிய** (Sodomite) **பாவிகள் இருந் தார்கள்.**

43. இப்பொழுது, கவனியுங்கள், சோதோமியரும், அங்கேயிருந்த சம்பிரதாய சடங்கைக் கொண்டவர்களும், லோத்து தன்னுடைய சம்பிரதாய நிலையில் இருந்தான்... இப்பொழுது, அவன் ஒரு நல்ல மனிதன் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. "அந்தப் பட்டணத்தினுடைய பாவங்கள் அவனுடைய நீதியுள்ள ஆத்துமாவை வாதித்தன (vexed - எரிச்சலுட்டின, கண்டதும் வெறுப்படையச் செய்தன, கோபமூட்டின, வெறுப்பூட்டின, தொல்லை கொடுத்தன - மொழிபெயர்ப்பாளர்)". ஆனால் அங்கே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட, அழைக்கப்பட்ட, முன்குறிக்கப்பட்ட சபை இருந்தது, அவனுக்கு 75 வயதாக இருந்தபோதே அவன் அழைக்கப்பட்டு, அவனுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது, நிச்சயமாகவே அது இருக்கும் என்று கூறும்படியாக சோதனையை

அனுமதிக்கும்படியாக. அவன் அதை உறுதி யாக நிச்சயப்படுத்திக்கொள்ளும் நிலைக்கு இங்கே சற்று அதிகத் தூரமாக நாம் புரிந்துகொள்ளும் வரையில் காத்திருந்தான். சரி. அவன் கொண்டிருக்கப் போகிற அந்தப் பிள்ளையைக் குறித்து அவனிடம் கூறினார். **ஆபிரகாம் தேவனுடைய வாக்குத் தத்தத்தில் தடுமாறிக் கொண்டிருக்க வில்லை.** எத்தனை கூடுதல் டாலர்கள் இங்கே வைக்கப்பட்டிருந்தாலும், அவனால் சோதோமில் எவ்வளவு பணக்காரனாக இருந்திருக்க முடிந்திருந்தாலும், அவனால் என்ன செய்ய முடிந்திருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, **அவன் தேவனோடு கூட தரித்திருந்து, வாக்குத்தத்தத்தை பற்றிப்பிடித்துக் கொண்டான். அதுதான் தெரிந்து கொள்ளப்பட்ட சபை.** அவர் களில் சிலர் மெதோடிஸ்டுகளிலும், சிலர் பாப்டிஸ்டுகளிலும், சிலர் பெந்தெகோஸ்தே காரர்களிலும் இருக்கிறார்கள். **தெரிந்து கொள்ளப்பட்ட சபையானது எல்லா**

**குழுக்களிலிருந்தும் வெளியே அழைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.** அது சரியே. **அந்த சத்தத்திற்கு செவி கொடுக்கிற ஒன்று அதுதான்.**

44. இயேசு வந்த போது, அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர்கள் ஏன் அவரை அடையாளம் கண்டுகொள்ள வில்லை? **அது மிகவும் காலதாமத மாகும் வரையில் அவர்கள் ஒரு போதும் அதை அடையாளம் கண்டு கொள்ளவேயில்லை. எலியா தேவ னுடைய தீர்க்கதரிசி என்று அவர்கள் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.** ஏன், அவனை கேலிபண்ணும்படியாக, அவர் கள் தங்கள் பிள்ளைகளை வெளியே அனுப் பினார்கள், அவனை அந்தப் பிள்ளைகள் வழுக்கைத் தலையனே என்று அழைத் தார்கள், ஏனென்றால் அவன் ஒரு சிறு பையனாக இருந்த போதே அவன் தலை வழுக்கையாக போய்விட்டது. அவர்களுக்கு

எதுவுமே தெரியாதிருந்தது. **அவன் ஏதாவது தீர்க்கதரிசியாக இருந்தானா என்பதையும் அவர்கள் நம்பவில்லை. நிச்சயமாகவே அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. அவர்கள் ஒருபோதும் அதை விசுவாசிப்பதில்லை.** இயேசு, "நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களாக இருக்கிறீர்கள், நீங்கள்-நீங்கள் தீர்க்கதரிசிகளின் சுவர்களை பளபளப்பாக்குகிறீர்கள், அவர்களை அங்கே உள்ளே வைத்தது நீங்கள் தான்" என்று கூறவில்லையா.

**எரேமியாவையோ, ஏசாயாவையோ, தீர்க்கதரிசிகளில் எவரையும் கவனித்துப் பாருங்கள். அதெல்லாம் முடிந்து போகும் மட்டுமாக அவர்கள் அதை அடையாளம் கண்டுகொள்ளவேயில்லை.** யோவான் வந்த போது, என்ன... என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. "உரைக்கப்பட்டிருந்த எலியா அவன் தான்" என்று இயேசு தாமே கூறினார். தங்கள்


இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள், யோவான் தான் அந்த எலியா என்று சீஷர் களும் கூட அறிந்திருக்கவில்லை. **இயேசு வந்தபோதும், அவர் இயேசு என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை; அவர் தான் கிறிஸ்து என்று அவர் கள் அடையாளம் கண்டுகொள்ள வில்லை. ஆனால் நித்திய ஜீவனுக் கென்று நியமிக்கப்பட்டவர்களோ, "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக் கின்றன." அவர்கள் தான் அதை அடையாளம் கண்டுகொண்டார்கள்.**

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)*

அப்பொழுது அவர், "சாராள் ஏன் நகைத்தாள்?" என்றார். அவர் என்னத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தார்? "சாராள் ஏன் நகைத்தாள்?" அது அழிவிற்கு முன்னான சில மணி நேரங்களாக இருந்தது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-03-01M, வாசல் இடுக்கமாய் உள்ளது

56. இப்பொழுது ஆபிரகாம் (அவர்கள் அவனை தங்களுடைய தகப்பன் என்றழைத்தனர்) தேவனை சந்தித்தபோது, அவரும் கூட மாம்சத்தில் இருந்தார். ஏனென்றால் அவர் ஒரு கன்றுக்குட்டியின் மாம்சத்தைப் புசித்து, சோள ரொட்டியைப் புசித்து, பாலைப் பருகி, வெண்ணெயை ஆபிரகாமின் முன்னிலையிலே புசித்தார். ஆயினும் அவர் தேவனாய் இருந்தார். ஆபிரகாம் அவரை தேவனென்று அடையாளங்கண்டுகொண்டு, அவரை, "ஏலோஹிம்" என்றழைத்தான். அது சர்வ வல்லமையுள்ள யேகோவா ஆகும். ஒரு மனிதன் ஆடைகளை அணிந்தவராய்,

தன்னுடைய சரீரத்தின் மேல் தூசியோடு, ஒரு மரத்தின் கீழே நிழலுக்காக அமர்ந்து, மாம்சம் புசித்து, பாலைப் பருகினார். அப்பொழுதும் அந்த குளிர்ந்துபோன, கொடூர இருதயங்கொண்ட, தன்னல யூத நீதிமான்களால் அவர் தேவ குமாரனாய் இருக்க வேண்டும் என்று விசுவாசிக்க முடியவில்லை, ஆனாலும் ஆபிரகாமை தங்களுடைய தகப்பன் என்று அழைத்துக் கொண்டனர். அவர் தன்னுடைய மாம்ச சரீரத்தில் அதே காரியத்தை செய்து கொண்டிருந்தார் என்பதையும், தேவன் அவர்களுடைய தகப்பனாகிய ஆபிர காமை சந்தித்தபோது வேறொரு மாம்ச சரீரத்தில் அதைச் செய்தார் என்பதையும், அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்து கொண்டிருந்தார். ஆபிரகாம் அதை விசுவாசித்தான். ஆனால் அவர்களால் அதை விசுவாசிக்க முடியவில்லை.

57. நீங்கள் பாருங்கள், அப்பொழுது ஆபிரகாம் தன்னுடைய கூடாரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏனென்றால் அவன் ஒன்றை தெரிந்து கொண்டிருந்தான். அந்த தெரிந்து கொள்ளுதல் இந்த உலகத்தில் பிறந்திருக்கின்ற ஒவ்வொரு நபருக்கு முன்பாகவும் கொண்டுவரப் படுகிறது. ஒவ்வொரு நபருக்கு முன்பா கவும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் வைக்கப் பட்டிருக்கிறது. லோத்தும், அவ னுடைய சகோதரனின் மகனும், அவர்க ளுடைய மேய்ப்பர்களும் நிலங்களைக் குறித்து வாக்குவாதம் செய்யத் துவங்கினர். ஆபிரகாம் ஒரு நீதிமானாயிருந்தபடியால், அவர்களிடத்தில், "நமக்குள்ளே வாக்கு வாதங்களே இல்லாதிருக்கட்டும், நீ செல் வதற்கான உன்னுடைய வழியை தெரிந்து கொள்'' என்றான். அந்த நிலைமை ஒவ் வொரு விசுவாசியினுடைய ஜீவியத்திலும்

உண்டாகிறது. அது இந்த காலையில் உங்களுக்கு முன்பாக இருக்கிறது. அது எனக்கு முன்பாகவும் இருக்கிறது.

58. லோத்து பின்வாங்கிப் போகப் போகிறான் என்பதை அவன் சிந்தித்துப் பார்க்கவேயில்லை. ஆனால் அவன் காரியங்கள் சுலபமாய் இருந்த சோதோமையை எதிர்நோக்கிச் சென்றான். அநேக சமயங்களில் நாம் சுலபமான வழியையே எதிர்நோக்குகிறோம். "நான் இந்த குறிப்பிட்ட - குறிப்பிட்ட சபையில் சேர்ந்து கொள்வேன். நீங்கள் பாருங்கள், அப்பொழுது எவருமே அதற்கு விரோதமாக எதையும் கூறமாட்டார்கள். ஏனென்றால் அது நகரத்திலேயே மிகப் பெரிய சபையாக உள்ளது." சுலபமான வழியாயிற்றே! நாம் அநேக சமயங்களில் அதைச் செய்

யும்பொழுது நாம் தவறாய் இருக்கி றோமே!

59. நினைவிருக்கட்டும், நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றினால், நீங்கள் ஜனங் களால் வெறுக்கப்படுவீர்கள், ஏனென்றால் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள். நீங்கள் கிறிஸ்துவண்டை வரவேண்டுமானால், நீங்கள் எந்த சபை யின் மூலமாகவோ அல்லது எந்த ஸ்தா பனத்தின் மூலமாகவோ அல்லது எந்த கோட்பாட்டின் மூலமாகவோ வரமுடியாது. நீங்கள் இரத்தத்தினாலே வரவேண்டும். அதுவே உள்ளே வருவதற்கான ஒரு வழியாய் உள்ளது. நீங்கள் உங்களோடு வேறு யாரையும் அழைத்துக் கொண்டு வரமுடியாது. நீங்கள் தனிமையாகவே வந்து, உங்களுடைய சொந்த அறிக்கை

யிடுதலின் பேரில், உங்களுடைய சொந்த விசுவாசத்தின் பேரில் நிற்க வேண்டும். நீங்கள் போதகரின் பேரில் அல்லது உங்களுடைய சொந்த தாயாரினுடைய விசுவாசத்தின் பேரில் சவாரி செய்ய முடியாது. நீங்கள் தேவனண்டை வரும் பொழுது, நீங்கள் தனிப்பட்ட முறையி லேயே வரவேண்டும். அநேக சமயங் களில் நாம் அந்த மூடத்தனமான தெரிந்து கொள்ளுதல்களைச் செய்கிறோம்.

60. லோத்து, அவன் சுலபமான ஒவ்வொரு காரியத்தையும் கண்டபோது ........ அவன் அங்கே அதிக பணமும், அதிக புகழும் இருந்ததைக் கண்டான். ஏனென்றால் அவன் ஒரு அந்நியனாய், ஒரு அறிவுத்திறன் கொண்ட மனிதனாய், கல்வி கற்றவனாய், அதிக மனோதத்துவம் பயின்றவனாய் இருந்திருப்பான். எனவே

அவனால் குறிப்பிட்ட காரியங்களைச் செய்து, அதே சமயத்தில் தன்னுடைய மார்க்கத்தை நிர்வகித்துக் கொள்ள முடிந்தது. அவன், "நான் - நான் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கி றேன், எனவே நான் சோதோமுக்குச் செல்லலாம். நான் கொஞ்சம் கூடுதலாக பணத்தை சம்பாதிக்கலாம், நான் ஒரு பெரிய மனிதனாக மாறிட லாம், ஒருக்கால் ஒரு அருமையான பிரசங்கியாய் மாறி விடலாம்" என்றே எண்ணிக்கொண்டான். பாருங்கள், நீங்கள் ஒரு தெரிந்து கொள்ளு தலை செய்ய வேண்டும்.

61. சபையோரும் ஒரு தெரிந்து கொள்ளுதல் செய்ய வேண்டிய வர்களாய் இருக்கின்றனர். "நான் அங்குள்ள இந்த குறிப்பிட்ட சபைக்குச் செல்வேன், ஓ, பட்டணத்தில் உள்ள எல்லோருமே இது

தான் பெரியதாய் உள்ளது என்று கருது கிறார்களே! ஏன்? பெரு நகராண்மைக் கழகத் தலைவரும் இந்த சபையை சேர்ந்தவராயிருக்கிறாரே.'' இப்பொழுது, அவன் உண்மையாகவே நன்றாயிருந்த ஒரு சபையைச் சார்ந்து கொண்டிருந் திருக்கக்கூடும். ஆனால் எப்போதும் நீங்கள் அந்த சபையையும், அதனுடைய ஜனங்களையும் வேதவாக்கியங்களைக் கொண்டு நியாயந்தீர்க்க வேண்டும். சில நேரங்களில் அவர்கள் அது மக்களின் பாராட்டிற்குரிய விதத்தில் அமைந்துள்ள காரணத்தால், குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல ஜனங்கள் நன்றாக உடை உடுத்து கின்ற காரணத்தால் செல்கின்றனர். அங்கு தான் நாம் ஒரு - ஒரு முக்கியமான தவ றைச் செய்கிறோம். இப்பொழுது இதைக் கவனியுங்கள்.

62. ஆபிரகாம் இரண்டாவதாக தெரிந்து கொள்வதை தேர்ந்தெடுத்துக் கொள்வதே, அவன் செய்யக்கூடிய ஒரே காரியமாய் இருந்தது. சில நேரங்களில் முதல் தெரிந்து கொள்ளுதலைக் காட்டிலும் இரண்டாவதாக தெரிந்து கொள்வதே மேலானதாய் இருக்கிறது. அது அந்தவித மாய் தெரிந்து கொள்ளப்பட்டால் நலமா யிருக்கும். கவனியுங்கள், லோத்து அந்தப் பெரிய நகரத்தை கண்ட போது, அது கால நீடிப்புடையதாய் இருக்கவில்லை. ஏனெ னில் தன்னுடைய மனைவி உப்புத்தூணா வதை அவன் காணவில்லை. அந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதை அவன் காணவில்லை. ஆனால் ஆபிர காமோ கர்த்தருடைய நிந்திக்கப்பட்ட சில ருடைய வழியையே தெரிந்து கொண் டான். அவன் வனாந்திரங்களில் தரித்திருந் தான்.

63. அதே சமயத்தில் சாராள் என்ன கூறியிருப்பாளென்றால் ....... இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், தேசத்திலேயே சாராள் மிகவும் அழகுள்ள ஸ்திரீயாய் இருந்தாள். அங்கே சாராளைப் போல அழகுள்ள ஸ்திரீகளே இல்லாதிருந்தனர். ஒவ்வொருவரும் அவளைக் கண்டபோது, அவளோடு காதல் கொண்டனர். இப் பொழுது அந்தவிதமான ஒரு தெரிந்து கொள்ளுதலை தெரிந்து கொள்வது சாரா ளுக்கு எவ்வளவு சுலபமாய் இருந்திருக் கும். ஆனால் அவளோ ஆபிரகாமோடே தரித்திருப்பதையே தெரிந்து கொண்டாள்.

64. ஓ, ஸ்திரீயே, இதிலும் அதிலும் சேர்ந்து கொண்டு புகழ்பெற்று விளங் கும்படி பிசாசு உன்னை குருடாக்க அனுமதிக்க வேண்டாம். நீ கிறிஸ்துவோடு தரித்திரு. ஏனென்றால் வேளையானது

சமீபமாய் உள்ளது. சோதோம், கொமோ ராவிற்கு நேரிட்டதைக் காட்டிலும் பெரி தான அழிவுகள் இந்த தேசத்திற்காக முன்நோக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சோதோம் கொமோராவிற்கே ஒரு நற்பெயர் அமைந்துவிடும்.

65. இப்பொழுது ஆபிரகாம் தேவனால் அவனுக்கு அருளப்பட்டிருந்த வழியை தெரிந்து கொண்டபோது, தேசம் வளமற்ற தாய் இருந்தது. அவன் செழிப்பாயிருக்க வில்லை. ஆனால் அப்படியிருந்தும் அவன் தேவனை சேவித்தான். அவன் தேவனை விசுவாசித்தான் என்ற ஒரு காரியத்தை அவன் அறிந்திருந்தான்.

66. ஆகையால் ஓர்நாள் மூன்று மனிதர்கள் அங்கு வந்தனர். அவர்கள் புழுதியாயும், களைப்படைந்தவர்களாயும் இருந்தனர். எனவே ஆபிரகாம் அவர்களுக்

காக மனம் வருந்தினான். அப்பொழுது அவன், "அருகில் வந்து, கொஞ்ச நேரம் அப்படியே சிந்தூர மரத்தின் (Oak Tree) கீழே அமருங்கள்'' என்றான். அவன் நின்று அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்த போது, அவர்கள் வெறுமென சாதாரண மனிதர்கள் அல்லவென்பதை அவன் அடையாளம் கண்டு கொண்டான். அவர்க ளுடைய பேச்சிலேயே, அவர்கள் வித்தி யாசமாய் இருந்தனர். ஆபிரகாம் சென்று ஒரு இளங்கன்றைக் கொன்று, அதை சமைத்து, சாராளை அப்பத்தை சுடச்செய்து அவர்களை போஷிக்க ஆயத்தம் பண்ணி னான்.

67. இப்பொழுது நினைவிருக்கட்டும், அவர்களில் இருவர் தூதர்களாய் இருந் தனர். தூதர்கள் மானிட சரீரத்தில் இருந் தனர். அவர்களில் ஒருவர் தேவானாகவே

இருந்தார். தேவனாயிருந்த அந்த ஒருவர் கூடாரப்பக்கம் தன்னுடைய முதுகை திருப்பியிருந்தார்.

68. சாராள் கூடாரத்தில் இருந்தாள். ஒரு ஸ்திரீ ஒவ்வொரு முறையும் யாராவது ஒருவர் வரும்பொழுது, அவளுடைய கணவன் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்படி வெளியே செல்லாமல், அதைப் போன்ற தன்னுடைய இடத்தில் தங்கியிருப் பதையே நான் காண விரும்புகிறேன். ஆனால் அவள் கூடாரத்தில் இருந்தாள். எனவே ஒருக்கால் அவள் ஏதோ ஒன்றை செய்து கொண்டு அல்லது தட்டுமுட்டு பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்திருப் பாள் என்பதில் சந்தேகமேயில்லை.

69. தேவனாயிருந்த இந்த ஒருவர், சோதோமையே நோக்கியவாறு பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் அவர் என்ன

செய்யப் போவதாக இருந்தார் என்பதை அவர் அவர்களிடத்தில் கூறினார். எனவே இரண்டு தூதர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அங்கே சென்றனர். ஆனால் தேவனாய் இருந்த அந்த ஒருவர் அங் கேயே இருந்துவிட்டார். மேலும், அவர், "எனக்குத் தெரிந்த இரகசியங்களை நான் ஆபிரகாமிற்கு மறைத்து வைக்கப் போவ தில்லை. ஏனென்றால் அவன் உலகத்தின் சுதந்தரவாளியாக இருக்கப் போகிறானே'' என்றார்.


70. ஓ, சபையே, இந்த காலையில் நாம் கர்த்தருடைய வருகையின் இரகசியங் களை அறிந்து கொள்ள உரிமை பெற் றுள்ளோம். ஏனென்றால், "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர் கள் தேவனுடைய புத்திரர் என்னப்படு வார்கள். நீதியின் மேல் பசிதாகமுள்ள

வர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சாந்த குண முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்." ஆகையால் ஜீவனுள்ள தேவனுடைய சபை யானது பூமியை சுதந்தரிக்க வேண்டியிருப் பதால், அதற்கு எந்த இரகசியங்களுமே மறைக்கப்பட்டிராது.

71. இயேசு, "பிதாவானவர் எனக்கு கூறியிருக்கிற யாவற்றையும் நான் உங்க ளிடத்தில் கூறியிருக்கிறேன்" என்றார். ஆனாலும் அவர்களால் அவரை விசுவா சிக்க முடியவில்லை.

72. எனவே அவர் அவர்களிடத்தில் ஆபிரகாமின் நாட்களில் நடந்ததை குறிப் பிட்டு கூறிக்கொண்டிருந்தார். மேலும்

ஆபிரகாம் அந்த தூதனிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, அவருடைய முதுகு கூடாரப்பக்கமாக திரும்பியிருந்தது என்று அவர் கூறினார். அப்பொழுது அவர் ஆபிரகாமிடத்தில் அவர் ஒரு குழந்தை யோடு வரப்போவதாக இருந்ததைக் கூறினார். கூடாரத்தில் இருந்த சாராளோ நகைத்தாள். அப்பொழுது அவர், "சாராள் ஏன் நகைத்தாள்?'' என்றார். அவர் என்னத் தைக் காண்பித்துக் கொண்டிருந்தார்? "சாராள் ஏன் நகைத்தாள்?" அது அழி விற்கு முன்னான சில மணி நேரங்களாக இருந்தது. அப்பொழுதே அது சம்ப வித்தது. சரியாக அழிவிற்கு முன்பாக, வானத்திலிருந்து அக்கினி வந்து அந்த நகரத்தை சுட்டெரிப்பதற்கு முன்பு, அந்த அடையாளம் செய்து காண்பிக்கப்பட்டது.



# நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறது. விருந்துகள் அல்ல. நியாயத்தீர்ப்பு

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 60-02-29, வருகின்ற புயல்

39. இன்றைக்கு உலகத்திற்கு - அதுவும் அமெரிக்காவிற்கு - சுவிசேஷம் தேவையில்லை. அவர்கள் விரும்புவது களியாட்டே.

அவர்களை மகிழ்விக்க அவர்களுக்கு ஏதாவதொன்று தேவையுள்ளது - நிறைய புதுமையான இசை அல்லது விருந்துகள், அல்லது கன்று ரோஸ்டு போன்றவை.

இவையெல்லாம் நல்லதுதான் - சபைக்குப் புறம்பே. ஆனால் சபையில் நியாய தீர்ப்பானது கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் பிரசங்கிக்

கப்பட்டு, எச்சரிக்கை விடுக்கப்பட வேண் டும்.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறது. விருந்துகள் அல்ல. நியா யத்தீர்ப்பு.

லோத்து எச்சரிக்கப்பட்டான். தூதர்கள் - அவர்கள் தூதர்கள் என்று அவன் அறியவில்லை - அங்கு சென்று, “இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா! நீ தப்பித்துக் கொள்ள தேவன் உனக்கு ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார். "இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா"! என்று சோதோமுக்கு தங்கள் செய்தியை அளித்தனர்.

40. "சோதோமின் நாட்களில் நடந்தது போல" என்று இயேசு கூறினார். அவர்கள்

எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்று பாருங்கள். இயேசு அந்நாளை இந்நாளுடன் ஒப்பிட்டார். பாவமுள்ளது!

லோத்து தன் ஜனங்களுக்கு இதை அறிவிக்கப் புறப்பட்டபோது, அவர்கள் அவனைக் கேலி செய்தனர்.

“நகரத்தின் அக்கிரமக் கிரியைகள் அவனுடைய இருதயத்தை வாதித்தது'' தூதர்களின் செய்தி அவர்களைக் கலக்கவில்லை, அவர்களில் எந்த பாதிப்பையும் உண்டு பண்ணவில்லை.

நியாயத்தீர்ப்பு நகரத்தை தாக்கவிருந்தபடியால், அவர்கள் வெளியே செல்லும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தேவன் அந்த நகரத்தின் மேல் அக்கினி புயலைக் கொண்டு வர ஆயத்தமானார்.

ஆனால் அவர்களோ வெளியே வர மறுத்தனர். அவர்கள் தங்கள் பாவங்களில் திருப்தி கொண்டிருந்தனர்.

41. ஜனங்கள் இன்று தங்கள் பாவங் களில் சௌகரியமாக வாழ்ந்து வருகின் றனர்.

ஏனெனில் நமக்கு புது கார் உண்டு, நாம் மூன்று வேளை ஆகாரம் உண்கி றோம். நமக்குப் படுக்க சுத்தமான படுக்கை உள்ளது.

அது நல்லது. ஆனால் நாம் செழிக்கும் போது, தேவனை மறந்துவிடுகிறோம் அப் படித்தான் நாம் செய்கிறோம் என்று நினைக்கிறேன்.

போதகர்களாகிய நாமும், கிறிஸ்தவர்க ளாகிய நாமும், நமது கட்டிடங்களை

கட்டுதல், அல்லது தற்போதுள்ளதைக் காட்டிலும் சிறந்த ஒரு சபையைப் பெறுதல், அதிகமான ஆலய இருக்கைகளை பெறுதல் போன்று திட்டங்களில் சிரத்தை கொண்டுள்ளோம்.

நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்கு புரியும்.

ஆனால் நாம் முக்கியமான காரியத்தை விட்டுவிட்டோம்: நியாயத்தீர்ப்பு, நீதி, பரிசுத்த ஆவியின் வல்லமை, உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு போன்றவைகளை.

லாஸ் ஏஞ்சல்ஸில் சமீபத்தில் நான் ஒரு செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தேன். கடந்த வருடத்தில் ஆண்புணர்ச்சிக்காரர் நாற்பது சதவிகிதம் அதிகரித்துள்ளனர். ஏன்? ஆண்களின் இயற்கையான நாட்டத்தின் தன்மை மாறுகின்ற அளவிற்கு பெண்கள் தங்கள் உடலை வெளிக்காண்பித்துள்ளனர்




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுதல், ஜூன் 7, 1962

216. நான்... அவருடைய பிரசன்னத்தை மாத்திரம் உணருகிறேன். அவர் இங்கே இருக்கின்றார் என்பதை நான் அறிவேன். கவனியுங்கள். இயேசு, "சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் காலத்திலும் அப்படியிருக்கும்" என்று கூறினார். பாருங்கள்? அது என்ன? சோதோமின் காலத்தில் இருந்தது போலவே ஒரு காலம். சோதோமில் இருந்தது போலவே, சோதோமின் பாவத்தைப் போலவே இருக்கும் தாறுமாறைக் கவனியுங்கள். இந்த தேசத்தைப் பாருங்கள். மற்ற தேசங்களைப் பாருங்கள்.

217. லாஸ் ஏஞ்சல்ஸில் சமீபத்தில் நான் ஒரு செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தேன். கடந்த வருடத்தில் ஆண்புணர்ச்சிக்காரர் நாற்பது சதவிகிதம் அதிகரித்துள்ளனர். ஏன்? ஆண்களின் இயற்கையான நாட்டத்தின் தன்மை மாறுகின்ற அளவிற்கு பெண்கள் தங்கள் உடலை வெளிக்காண்பித்துள்ளனர்.

ஆண்புணர்ச்சிக்காரர், "சோதோமின் நாட்களில் நடந்தது போல ......'' கவனியுங்கள். நீதிமானாகிய லோத்தும் தன்னுடைய குடும்பமும் அங்கே இருந்த போது, அவன் அந்த நகரத்தின் மேயர் ஆனான் அல்லது அந்த நகரத்தின் வாசலில் இருந்து ஒரு நீதிபதியாக ஒரு மகத்தான அறி வாற்றல் திறமிக்கவனாக இருந்தான். ஆனால் அந்த இடத்தின் பாவங்கள்

அவனுடைய நீதியான ஆத்துமாவை அனுதினமும் வாதித்தது.

218. முடிவின் சமயத்திற்கு முன்னர் ஒரு நாளிலே தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய ஆபிரகாம் வெளியே அழைக்கப் பட்டான். அது சோதோமிற்குள்ளாகச் செல்லவில்லை. அது சோதோமிற்கு வெளியே சென்றது. இப்பொழுது, எப்பொழுதுமே இருக்கின்ற இந்த மூன்று வகையான மக்களைக் கவனியுங்கள். ஒரு விசுவாசி, ஒரு பாவனை விசுவாசி மற்றும் ஒரு அவிசுவாசி எப்பொழுதுமே மக்களின் மத்தியில் இருக்கின்றனர். அது, ஆபிரகாம், லோத்து மற்றும் அந்த சோதோமியர், இப்பொழுது கவனியுங்கள். ஒவ்வொருவரும் ஒரு செய்தியைக் கொண்டிருந்தனர். தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய ஆபிரகாமிடத்தில் மூன்று தூதர்கள்

வந்தனர். அவர்களில் இரண்டு பேர் சோதோமிற்குச் சென்று லோத்துவையும் அவனுடைய மனைவி மற்றும் குமாரத்திகளையும் வெளியே கொண்டு வந்தனர். லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். சோதோமியர் எரிக்கப்பட்டனர்.

219. அவர்களில் இரண்டு பேர் - ஒரு நவீன பில்லி கிரஹாம் மற்றும் ஒரு ஓரல் ராபர்ட்ஸ், அவனுடைய செய்திகள் சோதோமிற்குள்ளாகச் சென்று வார்த்தையை பிரசங்கித்து அந்த வார்த்தையைக் கொண்டு அவர்களைக் குருடாக்கினர். வார்த்தையை அவிசுவாசிப்பதென்றால் நீ குருடாயிருக்கின்றாய் என்பதே. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஒரு அவிசுவாசியை குருடாக்குகின்றது. அதைத் தான் பில்லி கிரஹாம் மற்றும் அந்த மகத்தான சுவிசேஷகர்கள் செய்துக் கொண்டிருக்

கின்றனர். குருடாக்கிக்கொண்டிருக்கின் றனர்.

220. ஆனால் தெரிந்துக்கொள்ளப் பட்டவனாகிய ஆபிரகாமுடன் ஒருவர் தங்கிவிட்டார். அவர் அவனுக்கு ஒரு அடையாளத்தை அளித்தார். அவர் அவனை சந்தித்ததற்கு முன்னர் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னர் அவன் ஆபிராமாயிருந்தான் என்பதை நீங்கள் நினைவில் கொண்டுள்ளீர்கள். அதற்கு முன்னார் சாராள், சா-ரா-ய் என்று இருந்தாள். ஆனால் இப்பொழுதோ ஆ-பி-ர-கா-ம் மற்றும் சா-ரா-ள் ஆக உள்ள னர். பாருங்கள்? ஆகவே இந்த ஒருவர் அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந் தார். அவர், "ஆபிரகாமே, உன் மனைவி சாராள்: இளவரசி எங்கே?" என்று கேட் டார்.

அதற்கு அவன், “அவள் கூடாரத்தில் இருக்கிறாள்” என்றான். அந்தக் கூடாரம் அந்த தூதனுக்குப் பின்புறமாக இருந்தது.

221. அவர், “ஆபிரகாமே” என்றார். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். சாராள் தொண்ணூறு வயது சென்றவளாகவும், ஆபிரகாம் நூறு - தொண்ணூற்றொன்பது வயது சென்றவனாகவும் இருந்தார்கள். அவர், “நான் உன்னிடம் வருகைத் தரப்போகிறேன்" என்றார். (நான், பெயர்ச் சொல்லினிடத்தில் பயன்படுத்தப்பெறும் சொல், pronoun) “நான் உன்னிடத்தில் வாக்குத்தத்தமாக சொல்லியிருந்தபடியே ஒரு உற்பவக்காலத் திட்டத்தில் உன்னிடத்திற்கு வருகைத் தரப்போகிறேன். வேறு விதமாகக் கூறினால் சாராள் இந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கப்போகிறாள்.

222. அப்பொழுது அவள் கூடாரத்தில் இருந்த அவள் நகைத்தாள். பாருங்கள். அவள் வயது சென்றவளாக இருந்தாள். அவள், "என் ஆண்டவனோடு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ" என்றாள். அவள் கணவனாகிய ஆபிரகாம், மேலும் அவள், "அவருக்கும் மிக அதிக முதிர் வயதாகிவிட்டதே'' என்றாள். ஏன், அவள் .... அவர்கள் கணவனும் மனைவியுமாக - ஒருக்கால் இருபது வருடங்களாக அவர் களுக்குள் கணவன் மனைவியாக உறவு கொள்ளாமல் இருந்திருக்கலாம். பாருங் கள்? அவர்கள் எல்லாவற்றையும் தாண்டி மிக வயது சென்றவர்களாக இருந்தனர். அவள், "எனக்கா?" என்று கூறி நகைத் தாள்.

223. அப்பொழுது அந்தத் தூதன், தன்னுடைய முதுகு திரும்பியிருந்த நிலை

யிலேயே, “சாராள் ஏன் நகைத்தாள்?" என்று கேட்டார். இதைக்குறித்து என்ன? மனோதத்துவத்தின் மூலமாகச் சிந்தனைகளை அறிவதா இது? “ஏன் சாராள் நகைத்தாள்?"

சாராள் வெளியே ஓடி வந்து “நான் நகைக்கவில்லை'' என்றாள். அவள் மிகவும் பயந்திருந்தபடியால் அப்படிச் சொன்னாள்.

அவர், "ஆம், நீ நகைத்தாய்" என்று கூறினார்.

224. சாராள் தன்னுடைய கணவனாகிய ஆபிரகாமின் நிமித்தமாகத் தான் உயிர் பிழைத்தாள். இல்லையென்றால் அவள் சரியாக அந்த இடத்திலேயே அழிந்து போயிருப்பாள். அவள் அதனுடைய

பாகமாக இருந்தாள். அதே போல சபை கிறிஸ்துவின் பாகமாக இல்லாதிருக்கு மானால், அதனுடைய அவிசுவாசத்தி னிமித்தமாக சரியாக இப்பொழுதே அழிந்து போயிருக்கும். ஒன்றுமே செய்ய முடியாது. ஆபிரகாமின் நிமித்தமாக அவரால் சாராளை அகற்றிப்போடமுடிய வில்லை. கிறிஸ்துவின் நிமித்தமாக அவ ரால் சபையை அகற்றிப் போட முடிய வில்லை. இரத்தமானது இன்னுமாக அங் கேயே இருக்கின்றது (பாருங்கள்? அது சரியே), அதன் பக்கமாக அது இருக்கின் றது.

225. இப்பொழுது கவனியுங்கள். இயேசு ..... இப்பொழுது அவன் இந்த மனிதனை என்னவென்று அழைத்தான் என்பதைக் கவனியுங்கள். லோத்து - அல்லது லோத்து..... அந்தத் தூதர்கள்

லோகத்தை வெளியே அழைத்து வந்தனர். கவனியுங்கள். இந்த தூதனைத் தொழுது கொள்ள ஆபிரகாம் சென்றான். அவரை ஏலோகிம் என்று அழைத்தான். அது என்னவாயிருந்தது? அந்த இளங்கன்றின் சாப்ஸ், ஒரு ஆட்டுக்குட்டி - இல்லை ஒரு இளங்கன்றின் இறைச்சியைச் சாப்பிட்டார். அவர் பாலைக்குடித்து அப்பத்தை, ஒருக்கால் சோள ஆகாரத்தை, அப்பத்தைச் சாப்பிட்டார். சாராள் அவைகளைச் சமைத் தாள். அவர் அப்பத்தைச் சாப்பிட்டு, மாட் டின் பாலைக்குடித்து, இளங்கன்றின் இறைச்சியைப் புசித்தார் (அது சரி), அவர் அங்கே நின்று கொண்டிருந்தார். ஆபிர காம், ஆகவே ஆபிரகாம் அவரை ஏலோ கிம் என்று அழைத்தான். அவர் யாரென்று அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவன் தான் அவரிடத்தில்

பேசினான். அது சரி தானா என்று பாருங்கள். ஏலோகிம், பெரிய எழுத்து க-ர்-த்-த-ர் துவக்கத்தில் இருந்த அதே கர்த்தர்.

226. அது என்னவாயிருந்தது, இயேசு "லோத்தின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" என்று கூறினார். ஆதியில் வார்த்தையாக இருந்த ஏலோகிம், தாம் இங்கே இருந்த விதமாகவே மாம்சத்தில் வெளிப்படுத்தப்படுவார். அல்லேலூயா. ஏலோகிம் என்றால், நான் இருந்தேன் என்றல்ல; இருக்கிறேன் என்பதே. பாருங்கள்?

# பின்னிட்டுப் பார்க்கும்படி நிற்கக் கூட செய்யாதீர்கள். பின்னிட்டுப் பார்க்க நமக்கு எந்த நேரமும் இல்லை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# லூக்கா 9:62

## அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

# செய்தி: 57-08-18 காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள்

---

63. அதன்பிறகு நான் வேறொரு ஞாபகச் சின்னத்தைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், அது ஒருநாள், ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது. அவள் நீர்பாய்ச்சலான சமபூமியில் தங்க (stay up) கூடாது என தீர்மானித்தாள், அல்லது சோதோம் கொமோராவுடைய நீர்ப்பாய்ச்சலான சமபூமியில் தங்கியிருந்து, கூடிப்பழகும் இயல்புடையவளாய், அந்நாட்களில் இருந்த அந்த மற்ற

பெண்களைப் போன்று ஜீவிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

64. வறண்ட தரிசு நில பூமியில் தங்கின சாராளைப் போன்று அவள் நல்ல தெரிந்து கொள்ளுதலைச் செய்யவில்லை. அவள் (சாராள்) மாத்திரமே தேவனுடைய வார்த்தையை தன்னுடைய இருதயத்தில் வைத்திருந்தாள். அவள் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படிகிறவளாகவும் மிக அருமையானவளாகவும் இருந்தாள், அவள் அவ்வளவாய், அவனை, ஆண்டவனே என்று அழைத்தாள். அங்கு தான் தேவன் இரண்டு தூதர்களோடு இறங்கி வந்து, அந்தக் கூடாரத்தில் அவர்களிடம் விஜயம் செய்தார்.

65. ஆனால், திருமதி. லோத்துவோ, அவள் மிகவும் உலகப்பிரகாரமாக ஆகி, உலகத்தின் காரியங்களை ஏற்றுக்கொண்

டாள். இன்று, மிகவுமாக உலகப்பிரகார மான சிந்தையை உடையவர்களாய் ஆக முடிகிற, நமக்கு அது என்னவொரு பாடமாக இருக்கிறது. நான் மிகவும் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், இன்று முழு சபையும் மிகவும் உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாக (worldly-minded) ஆகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது, ஒருக்கால், திருமதி. லோத்து, அவள் அங்கே போனபோது, அதைச் செய்ய கருதாமல் இருந்திருக்கலாம். அவள், "கூடிப்பழகும் இயல்புடையவ ளாய் இருப்பேன்" என்று நினைத்தாள். கூடிப்பழகும் இயல்புடையவர்களாய் இருப்பது எல்லாம் சரிதான், ஆனால் உலகத்தின் பழக்கவழக்கங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள் (take up).

66. நீங்கள் போகும்போது, சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவைப் போன்று செல்லுங்கள். அவர்கள் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளக் கூடாது என்று தங்களுடைய இருதயத்தில் நோக்கம் கொண்டிருந்தார்கள், எது வந்தாலும் போனாலும் காரியமில்லை. மற்ற உலகத்தார் பின்வாங்கிப் போனாலும், என்ன நடந்தாலும் அது ஒரு பொருட் டல்ல, அவர்கள் தங்களுடைய இருதயத் தில் நோக்கம் கொண்டிருந்தார்கள். அவர் கள் இன்று ஒரு ஞாபகச் சின்னமாக இருக்கிறார்கள்.

67. மேலும் திருமதி. லோத்து ஒரு ஞாபகச் சின்னமாக நிற்கிறாள். தேவன் அவளுக்குத் தம்முடைய கடைசி கிருபை யின் செய்தியைக் கொடுத்து, அவர் அந்த தூதர்களை அங்கே அனுப்பி, ஒரு சில மணி நேரங்களில் சோதோமும் கொமோ

ராவும் சுட்டெரிக்கப்படப் போகின்றன என்று அவர்களிடம் கூறப்பட்ட போது, இன்னுமாக, தன்னுடைய சமுதாய ஜீவியத்தை விட்டுவிட்டு, வெளியே வனாந்தரத்திற்கு, அங்கே வெளியே வனாந்தரத்தில் ஜீவித்திருந்த சாராளைப் போன்று ஜீவித்து, பகட்டற்ற பெண்மணி களுடைய சாதாரணமான எளிய வஸ்திரங்களை உடுத்த வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டவளாய் நிற்க அவளால் முடியாதிருந்தது. அவளுடைய கணவன் அந்தப் பட்டணத்தில் ஒரு மகத்தான மனிதனாக ஆகியிருந்தான். அவன் ஒரு நியாயாதிபதியாகவோ அல்லது பட்டணத்தின் ஒரு மேயராகவோ வாசலில் உட்கார்ந்திருந்தான். அவள் இந்த ஆடம்பரங்களை விரும்பினாள். அக்காரி யங்களை விட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவளாய் அவளால்

நிற்க முடியாதிருந்தது. அவள் தன்னுடைய கணவனோடு பட்டணத்தை விட்டு வெளியே போகையில், அவள் தொடர்ந்து பின்னிட்டுப் பார்த்துக் கொண்டேயிருந்து, அவள் அதை விட்டுவிட்டு, அந்த மரணத்தின் சுபாவத்திலிருந்து தன்னை வேறுபிரித்துக்கொள்ள வேண்டியிருந்த காரணத்தினால் அழுதுகொண்டும் துக்கப் பட்டுக்கொண்டும் இருந்தாள்.

68. **"கலப்பையின் மேல் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்ப்பதற்குக் கூட திரும்புகிற மனுஷன், உழுவதற்கு தகுதி யுள்ளவன் அல்ல" என்று இயேசு கூறியுள் ளார். நாம் எம்மாதிரியான ஜனங்களாய் இருக்க வேண்டும்?**

**கலப்பையின் மேல் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்காமல் இருந்தும் கூட, ஆனால் பின்னிட்டுப் பார்க்க சற்று திரும்பி**

**னாலும் கூட, அவன் உழுவதற்கு அவனுக்கு தகுதியும் கூட கிடையாது. ஓ, நாம் நம்முடைய கண்களையும் இருதயங்களையும் ஒருவரிடம் மாத்திரமே வைத்திருக்க வேண்டும். மற்ற ஜனங்கள் என்ன செய் தாலும், சபை என்ன செய்தாலும், அண்டை வீட்டார் என்ன செய்தாலும், மற்ற யாராவது என்ன செய்தாலும், அது ஒரு பொருட்டல்ல, உங்கள் இருதயத்தை கல்வாரியின் மேல் ஒருமுகப்படுத்தி கவனம் செலுத்துகிறவர்க ளாய் வைத்துக்கொள்ளுங்கள்.**

**பின்னிட்டுப் பார்க்கும்படி நிற்கக் கூட செய்யாதீர்கள். பின்னிட்டுப் பார்க்க நமக்கு எந்த நேரமும் இல்லை.**

69. இந்த ஸ்திரீ. அவள் அவ்வாறு செய்த காரணத்தினால், ஜனங்கள் ஒருகாலத்தில் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்த பிறகு,

பின்னிட்டுப் பார்க்கத் திரும்பின ஜனங்கள் எல்லாருக்கும் தேவன் ஒரு ஞாபகச் சின்னத்தைக் கொடுத்தார். அவள் உப்புத் தூணாக மாறினாள். இந்நாள் வரையில், அவள் அங்கே நின்று கொண்டிருக்கிறாள், அந்த ஸ்திரீ தன்னுடைய தலையைத் திருப்பினவளாய், பின்னிட்டுப் பார்த்துக் கொண்டு அங்கே நின்று கொண்டிருப்பதை அந்தப் பிரதேசத்தில் காண முடியும். அவள் அந்த பிரதேசத்திற்குள் பின்னிட்டுப் பார்க்கும்படியாக, தன்னுடைய இடது தோள்பட்டைக்குத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய இருதயம் அங்கே பின்னால் தான் இருந்தது. இருப்பினும், அது இருந்த வணணமாக, இதைச் செய்யும்படியாக, அவள் கட்டாயப்படுத்தப்பட்டாள்.


70. இன்று, அநேக ஜனங்கள் கிறிஸ்துவை அந்தவிதமாகத்தான் எடுத்துக்

கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் உலகத்திலிருந்து வெளியே வந்தும், அவர்கள் அதைச் செய்யும்படியாக கட்டாயப்படுத்தப்படுவது போன்று உணருகிறார்கள். அவர்கள் தொடர்ந்து ஆசையோடு ஏங்கிக்கொண்டும், இச்சித்துக் கொண்டும் இருக்கிறார்கள், அவர்கள் திரும்பி வரும் அளவுக்கு அதிக காலமில்லை (it isn't long till they're back). அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது போன்ற, தேவனுடைய கிருபையின், தேவனுடைய அன்பின் ஒரு பயங்கரமான ஞாபக சின்னங்களாக அவர்கள் - அவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது, ஞாபகச் சின்னங்கள்!

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

மேலும் அவன், "இதோ பார், அன்பே, என்னவென்று உனக்குத் தெரியுமா? உன்னுடைய தலைமயிர் மீண்டுமாக கறுப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. கடந்த இரவு முதற்கொண்டு உன்னுடைய முகத்தின் கீழிருந்து எல்லா தோல் சுருக்கங்களும் அகன்று (மறைந்து) போய்க் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன்" என்றான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-0428, ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

நீங்கள் ஒரு சிறு பிள்ளை பருவத்தில் இருந்து படிப்படியாக வளருகிறீர்கள், உங்களுடைய முதலாவது சிறிய செல் வளர ஆரம்பிக்கும் போது - உங்களுக்கு ஏறக்குறைய 21 அல்லது 22 வயதாகும் மட்டுமாக, ஒருக்கால் உங்களுக்கு 25 வயதாகும் வரை அது (வளருகிறது.); நீங்கள் அப்போது தான் உங்களுடைய மிகச் சிறந்த நிலையில் இருக்கிறீர்கள். அந்தவிதமாகத்தான் தேவன் அந்த படத்தை வரைந்து வைத்தார்.

நீங்கள் கவனிக்கிற முதலாவது காரியம் என்னவென்றால், ஒரு நரைத்த தலைமுடி உள்ளே வருகிறது.

தாயாரே, அந்த அழகான கண்கள் கீழாக சுருங்கத் துவங்குகிறது.

அவர்கள் இன்றிரவு உட்கார்ந்து கொண் டிருக்கிறார்களே, அங்கே பாருங்கள்; அவர்கள் வயது சென்றவர்களாகவும், வலுக்குறைந்தவர்களாகவும், தலை நரைத்த வர்களாகவும் இருக்கிறார்கள்.

கவலைப்பட வேண்டாம், அதுதான் மரணம்.

ஏறக்குறைய 25 வயதான பிறகு, மரண மானது உங்கள் மேல் வர ஆரம்பிக்கிறது.

நீங்கள் பலவீனராகத் துவங்கி, உங்க ளுடைய இரத்த ஓட்டமானது கீழான நிலைக்கு போகத் துவங்குகிறது.

நீங்கள் என்ன செய்தாலும் காரிய மில்லை, நீங்கள் எவ்வளவு புசித்தாலும், நீங்கள் எவ்வளவு விஞ்ஞானப்பூர்வமான

காரியத்தை செய்தாலும், அது பொருட் டல்ல, நீங்கள் சரியாக கீழே தான் போய்க் கொண்டிருக்கிறீர்கள், ஏனென்றால் தேவன் அவ்விதமாகக் கூறினார்.

இப்பொழுது. சாராளும் ஆபிரகாமும் அவர்களுக்கு 100 வயதாகும் வரைக்கு மாக அவர்களும் அந்தவிதமாக கீழான நிலைக்குத் தான் வந்திருந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் ஆபிரகாம் தூக்கத்தை விட்டு விழித்தெழுந்து, "இதோ பார், அன்பே..." என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

சாராள் வாலிப பெண்ணாக இருந்த போது, அவள் ஒரு அழகான பெண்ணாக இருந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும்.

**மேலும் அவன், "இதோ பார், அன்பே, என்னவென்று உனக்குத் தெரியுமா? உன்**

னுடைய தலைமயிர் மீண்டுமாக கறுப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. கடந்த இரவு முதற்கொண்டு உன்னுடைய முகத்தின் கீழி ருந்து எல்லா தோல் சுருக்கங்களும் அகன்று (மறைந்து) போய்க் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன்" என்றான்.

"நல்லது," அவளும், "வயதானவரே, உம் முடைய தோள்களும் நேராகிக் கொண்டிருப் பதை நான் கவனிக்கிறேன்" என்று கூறி னாள்.

ஓ, என்னே ! ஒரு சில மணி நேரங்கள் கழித்து, அவன் ஒரு பக்கெட் தண்ணீர் அல்லது ஏதோவொன்றை எடுக்க வெளியே செல்கிறான், ஒருக்கால் அவன் திரும்பி வந்து, "சாராளே, நீ அழகானவளாய் காணப் படுகிறாய் !" என்றான்.

அவளும், "ஏன், ஆபிரகாமே, நீரும் நான் உம்மை விவாகம் செய்த போது இருந்ததைப்

**போன்று காணப்படுகிறீரே" என்றாள். அவர் அவர்களை பழைய நிலைக்கு மாற்றி விட்டார்.**

"ஓ," நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, அது முட்டாள்தனம்" என்று கூறலாம்.

நல்லது, ஒரு நிமிடம் பொறுங்கள், இப்பொழுது, அப்படியே ஒரு நிமிடம், பாருங்கள்?

கவனியுங்கள். அவர்கள் அப்பொழுதி லிருந்து கேராருக்கு வழியெல்லாம் பிர யாணம் செய்து சென்றார்கள் என்று வேதா கமம் கூறுகிறது.

அதை உங்கள் வரைபடத்தில் அளந்து பாருங்கள்; அது ஏறக்குறைய 300 மைல் கள் தூரம். அது ஒரு வயதான பாட்டிக்கும் தாத்தாவுக்கும் ஒரு மிகப்பெரிய பிர யாணம், இல்லையா?

உஷ்ணமான பாலைவனங்கள் வழியாக அவர்கள் கேராருக்குப் போனார்கள்.

அது மட்டுமல்ல, அவர்கள் அங்கு சென்று சேர்ந்த போது, அபிமெலேக்கு என்னும் பெயருடைய பெலிஸ்திய இராஜா ஒரு இனிய இருதயத்தை தேடிக் கொண்டிருந்தான்.

அந்த அழகான எல்லா பெலிஸ்திய வாலிப பெண்கள் சுற்றிலுமிருந்த போதிலும், ஒரு சிறு தொப்பியுடனும், சிறு வளைந்த தோள்களில் ஒரு கைத்தடியைப் பிடித்துக் கொண்டுமிருந்த இந்த வயதான பாட்டியை அவன் கண்ட போதா அவன், "நான் இவளுக்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் எனக்கு வேண்டும்" என்றான்.

அவன் சாராளோடு காதலில் விழுந்தான். அது வேதவாக்கியம் தானா?

ஆமென்! என்ன சம்பவித்தது? அவள் மீண்டும் ஒரு அழகான வாலிப பெண் ணாக மாறினாள். ஆமென்!

கவனியுங்கள். நண்பர்களே, அது இதை நிரூபிக்கிறதே.

தேவன் அவளுக்கு ஒரு குழந்தையை கொடுக்கப் போவதாய் இருந்து, அவ ளுக்கு 100 வயதாகியிருக்குமானால், அவர் செய்ய வேண்டிய முதலாவது காரியம் என்னவென்றால், அந்த இருதயத் திற்கு புத்துயிர் அளிப்பது தான், அல்லது அவளால் அந்தக் குழந்தையைக் கொண் டிருக்க முடியாது.

நான் எதைக் குறித்துப் பேசிக் கொண் டிருக்கிறேன் என்பது வயது வந்தவர்க ளாகிய உங்களுக்குத் தெரியும். அவள் மிகவுமாக பெலவீனமாயிருந்தாள்.

இப்பொழுது, அவர் செய்ய வேண்டியதாயிருந்த மற்றொரு காரியம் என்னவென்றால், பாலுக்கான இரத்த நாளங்களை அவர் உருவாக்க வேண்டியதாயிருந்தது.

அந்த நாட்களில் இந்த ஆரோக்கிய சுகாதார பாட்டில்கள் அவர்களிடம் கிடையாது.

அப்போது ஸ்திரீகள் புகைபிடிக்கவில்லை, அதுதான் இப்பொழுது அவர்கள் இந்த உடல் சார்ந்த தொல்லைகளைக் கொண்டிருப்பதற்கான காரணமாகும்.

அந்த தாய் அவள் வளர்க்க வேண்டிய விதத்தில் அவளுடைய குழந்தையை வளர்த்தாள்.

என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அங்கே அவர் இரத்த நாளங்களை

சிருஷ்டிக்க வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் அவைகள் உலர்ந்து போயி ருந்தன.

அவளுடைய கற்பப்பையை கருத்த ரிக்க வைக்க அவர் ஒரு அற்புதத்தை நடப்பிக்க வேண்டியதாய் இருந்தது, ஏனென்றால் அது மரித்துப் போயிருந்தது.

அது உண்மை தானா? (சபையோர், "ஆமென்" என்கின்றனர் - ஆசிரியர்.) தேவன் காரியங்களை பழுது பார்த்து சரிசெய்வதில்லை, அவர் அப்படியே ஒரு புத்தம் புதிய பெண்ணாக அவளை ஆக்கி விட்டார். ஆமென்! அல்லேலூயா!

அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொள்ளும் ஆபிரகாமுடைய ஒவ்வொரு குமாரத்திக்கும், ஆபிரகாமுடைய ஒவ் வொரு குமாரனுக்கும் அவர் அதைத்தான் செய்யப் போகிறார். நிச்சயமாகவே அவர்

அதைச் செய்வார். இது அதை நிரூபிக்கிறது.

சாராள் எந்தப் பிரச்சினையுமே இல்லாமல் அந்தக் குழந்தையைப் பெற்றாள் (அது உண்மை), அவனை வளர்க்கவும் செய்தாள்.

அவனுக்கு ஏறக்குறைய 45 வயது ஆவது வரைக்குமாக அவள் அநேக வருடங்கள் ஜீவித்தாள்.

சாராள் மரித்த பிறகு, இப்பொழுது, ஆபிரகாமைக் கவனியுங்கள், அவனுடைய சரீரம் பழைய நிலைக்கு மாறியிருந்தது என்பதை காண்பிக்கும்படியாக - அவன் வேறொரு பெண்ணை விவாகம் செய்து, அவனுக்கு குமாரத்திகளைத் தவிர ஒன்பது குமாரர்கள் இருந்தார்கள்.

மகிமை! அதுதான் நம்முடைய தேவன். அதைத் தான் அவர் செய்தார்.

ஏதோவொரு நாளில், இயேசு வரும் போது, அவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் அதையே செய்வார்.

ஒவ்வொரு தோல் சுருக்கமும், ஒவ் வொரு நரைத்த தலைமயிரும், வயதாகி வாடி வதங்கிப் போன ஒவ்வொரு கரமும், மற்ற யாவுமே மறைந்து போய், அவரோடு என்றென்றுமாய் வாழும்படியாக, ஏதோ வொரு நாளில், தேவன் அதைத் திரும்ப வுமாக அதனுடைய அழகில், அதனுடைய சிறப்பான நிலையில் அதைக் கொண்டு வருவார்.

ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நான் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்ல மையில் அவரை அறிந்துள்ளதற்காக நான் இன்றிரவு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மகிமையான நாட்களில் ஏதோ ஒன்றில், அவர் இயேசுவை அனுப்புவார்.

‘கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், (பின்பு) உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே என்றென்றுமாய் இருப்போம் (1 தெச. 4:16,17).’

அவருடைய அழகிலும், ஆரோக்கியத்தின் ஒளியிலும், வாலிபத்திலும் நாம் என்றென்றுமாக அவரோடு அரசாளுவோம், ஏனென்றால் நீங்கள் அவருடைய குமாரனின் மேல் விசுவாசம் கொண்டீர்கள், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். ஆமென்.






# லோத்தின் நாட்களில் நடந்தது போல



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து